## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

## O.S. No. 69/2023

### 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதி புதன்கிழமை

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பாண்டிராஜ் | தபெ/கபெ |
| ஊர் | | வட்டம் |
| சாதி | | சமயம் |
| வயது | | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். கடந்த 06.08.2021ம் தேதிய வாதி மகன் நாகராஜ் இறப்புச் சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.10.2021ம் தேதிய வாரிசச் சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.07.2017ம் தேதிய அசல் ஈடு கடன் பத்திரம் ஆவண எண். 1585/2017 அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.06.2017ம் தேதிய அசல் தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண். 1217/2017 அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.04.2022ம் தேதிய வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.04.2022ம் தேதிய ஒப்புதல் அட்டைகள்-4 எண்ணம் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.04.2022 மற்றும் 04.05.2022ம் தேதிய வழக்கறிஞர் அனுப்பிய பதிலறிவிப்பு சார்பு நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.03.2023ம் தேதிய தாவா சொத்துக்குரிய வில்லங்கச்

சான்றிதழ் 01.01.2016ம் தேதி முதல் கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 14.02.2022ம் தேதிய சிறப்பு அதிகார ஆவணம் (Notarised) உண்மை நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறப்பு அதிகார முகவரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை